# 24

# அல்குர்ஆனின் போதனைகள்

அல்குர்ஆனின் சிறப்புக்களை விளங்கிய நாங்கள் இங்கு அது கூறும் போதனைகளுள் ஒரு சிலவற்றை கற்றுக்கொள்வோம்.

அல்குர்ஆனின் 114 ஸூராக்களில் சிறிய ஸூராக்கள் இரண்டின் கருத்துக்களையும் அவை கூறும் போதனைகளையும் விளங்க முயற்சிப்போம்.

**ஸூரதுல் அஸ்ர்**

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ
وَالْعَصْرِ ﴿١﴾ إِنَّ الْإِنسَانَ لَفِي خُسْرٍ ﴿٢﴾ إِلَّا الَّذِينَ آمَنُوا
وَعَمِلُوا الصَّالِحَاتِ وَتَوَاصَوْا بِالْحَقِّ وَتَوَاصَوْا بِالصَّبْرِ ﴿٣﴾

அல்குர்ஆனின் 103 ஆம் ஸூராவான இது மூன்று ஆயத்துக்களைக் கொண்ட ஒரு மக்கி ஸூராவாகும். இதன் முதல் வசனமான ‘அஸ்ரு’ என்ற சொல் இதற்குப் பெயராக இடப்பட்டுள்ளது. ‘அஸ்ரு’ என்ற சொல் ‘காலம்’ என்ற பொருளைத் தருகின்றது. அந்த ஸூராவின் பொருள் வருமாறு.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் (ஓதுகிறேன்)

1. காலத்தின் மீது சத்தியமாக

2. மனிதன் (தன் ஆயுளை வீணில் செலவு செய்து) நிச்சயமாக நஷ்டத்தி(ன் வழியி)ல் இருக்கின்றான்.

3. ஆயினும் எவர்கள் விசுவாசம் கொண்டு, நற்கருமங்களையும் செய்து, சத்தியத்தை ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து, (பாவங்களை விடுவதிலும், நன்மைகளைச் செய்வதிலும் ஏற்படும் கஷ்டங்களைச்) சகித்துக் கொள்ளுமாறும் ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து வந்தார்களோ அவர்களைத் தவிர. (அவர்கள் நஷ்டமடையவில்லை).

இந்த ஸூரா, காலத்தின் மீது சத்தியமாக என்று ஆரம்பமாவதால், இதன் மூலம் காலத்தின் பெறுமதி உணர்த்தப்படுகின்றது. இதில் அல்லாஹ் சத்தியம் செய்து ஆரம்பிப்பதன் காரணமாக இது ஒரு முக்கிய ஸூரா என்பது உணர்த்தப்படுகின்றது.

இந்த ஸூரா நான்கு போதனைகளை மிகச் சுருக்கமாக முன்வைப்பதுடன் அவை ஒவ்வொன்றும் ஒன்றுடனொன்று தொடர்புள்ளனவாகவும் காணப்படுகின்றன. அவையாவன,

1. ஈமான் கொள்ளுதல்
2. நற்செயல் புரிதல்
3. சத்தியத்தை ஒருவருக்கொருவர் உபதேசித்துக் கொள்ளல்
4. சத்தியத்தை போதிப்பதால் ஏற்படும் சிரமங்களைப் பொறுத்துக் கொள்ளுமாறு உபதேசம் செய்தல்.

இதனை, மனித வாழ்வின் வெற்றிக்கான பாதை எதுவென்பதை மிகச் சுருக்கமாக முன்வைக்கும் ஒரு ஸூரா எனக் குறிப்பிடலாம்.

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் ''மனிதர்கள் இந்த ஸூராவை சிந்தித்துப் பார்த்தால் அதுவே அவர்களுக்கு நேர்வழிகாட்டப் போதுமானதாகும்'' எனக் குறிப்பிட்டிருப்பது இதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இனி இந்தக் கருத்துக்களைச் சற்று விரிவாக நோக்குவோம்.

''காலத்தின் மீது சத்தியமாக, நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான்'' எனும் முதலிரு ஆயத்துகளின் கருத்தை நோக்கினால், மனிதன் காலத்தின் மகிமையை உணர்ந்து அதனைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை விளங்குகிறோம். அதனை வீணாக்கி, பிரயோசனமற்ற வகையில் தீய காரியங்களில் கழித்தவன் இம்மையில் மட்டுமன்றி மறுமையிலும் நஷ்டமடைவான்.

'இந்த ஸூராவின் மூன்றாம் ஆயத் ஒரு முஸ்லிமிடம் காணப்பட வேண்டிய முக்கிய பண்புகள் சிலவற்றைக் குறிப்பிடுகின்றது. மனிதன் நஷ்டத்திலிருந்து மீட்சிபெற அவற்றைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகின்றது. அவற்றுள் முதன்மையானதாக ஈமானும் தொடர்ந்து நற்செயலும் இடம்பெறுகின்றன. ஒரு மனிதன் அல்லாஹ் மீது கொள்ளும் ஈமான் (நம்பிக்கை) அவனின் அகவாழ்வையும், புறவாழ்வையும் சீர்செய்கின்றது.

ஈமானும், அமலும் (நம்பிக்கையும், நற்செயலும்) ஒன்றுடன் ஒன்று இணைந்து காணப்பட வேண்டும். ஒருவனின் நற்செயல்கள் அல்லாஹ்வின் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமாயின் அவனிடம் ஈமானும் காணப்பட வேண்டும். ஈமானில்லாத நற்செயல்களால் நாம் எந்தப் பயனையும் அடைய முடியாது.

இம்மூன்றாம் வசனத்தின் இறுதிப்பகுதி 'சத்தியத்தைக் கொண்டும் பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசித்துக் கொள்வதை' வெற்றிக்குரிய அடுத்த பண்பாகக் குறிப்பிடுகின்றது. இங்கு, சத்தியம் என்ற பதம் இஸ்லாத்தையே குறிப்பிடுவதாகக் குர்ஆனுக்கு விளக்கமளித்தோர் குறிப்பிடுகின்றனர்.

ஸஹாபாக்கள் இந்த ஸூராவுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்தால் இதனை ஞாபகமூட்டி ஓதிக் காட்டாமல் பிரிந்து செல்லமாட்டார்கள்.

## ஸூரதுன் நஸ்ர்

ஸூரதுல் அஸ்ரின் போதனைகளைக் கற்றுக் கொண்ட நாம் மற்றுமொரு சிறிய ஸூராவான ஸூரதுன் நஸ்ரையும் அதன் போதனைகளையும் கற்றுக் கொள்வோம்.

இது ஹிஜ்ரி 10 ஆம் ஆண்டு துல் ஹஜ் மாதம் அய்யாமுத் தஷ்ரீக்குடைய ஓர் இரவில் அருளப்பட்ட ஒரு சிறிய மதனீ ஸூராவாகும்.




மூன்று ஆயத்துக்களை மட்டும் கொண்ட இந்த ஸூரா, அல்குர்ஆன் ஸூராக்களுள் முழுமையாக இறங்கிய கடைசி ஸூராவாகும். இதில் வரும் 'உதவி' எனும் கருத்தைத் தரும் 'நஸ்ரு' என்ற சொல் இதற்குப் பெயராக இடப்பட்டுள்ளது. இது அல்குர்ஆனின் 110 ஆவது ஸூராவாகும்.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் (ஓதுகிறேன்).

1. (நபியே! உமக்கு) அல்லாஹ்வுடைய உதவியும், (மக்காவின்) வெற்றியும் கிடைத்து.
2. அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக நுழைவதையும் நீர் கண்டால்,
3. (அதற்கு நன்றி செலுத்தும் பொருட்டு) உமதிறைவனைப் புகழ்ந்து துதி செய்து அவனுடைய (அருளையும்) மன்னிப்பையும் கோருவீராக! நிச்சயமாக அவன் மன்னிப்புக் கோருதலை அங்கீகரிப்பவனாக இருக்கின்றான்.

இந்த ஸூரா இறங்கியபோது ''எனக்கு எனது மரணச் செய்தி அறிவிக்கப்பட்டுவிட்டது. எனது வாழ்நாள் நிறைவடைந்துவிட்டது'' என முஹம்மத் r அவர்கள் கூறினார்கள் (முஸ்னத் அஹ்மத்). இந்த ஸூரா இறங்கிய பின் அவர்கள் இரண்டு மாதமும் சில நாட்களுமே உயிர் வாழ்ந்தார்கள். இது முஹம்மத் r அவர்களின் பிரிவை அறிவிப்பதால்

இதனை سُوْرَةُ التَّوْدِيْعِ (ஸூரதுத் தௌதீஃ) பிரியாவிடைக்குரிய அத்தியாயம் எனவும் கூறுவர்.

இந்த ஸூராவில் வரும் 'பத்ஹு' எனும் வெற்றி மக்கா வெற்றியையே குறிப்பிடுகின்றது. இரத்தம் சிந்தாத இந்த வெற்றியின் பின் மக்கள் சாரிசாரியாக இஸ்லாத்தில் நுழைந்தனர்.

இவ்வெற்றியைக் கண்டு முஸ்லிம்கள் இறுமாப்புக் கொள்ளவில்லை. ஏனெனில் இவ்வெற்றி முஹம்மத் r அவர்களின் ஆற்றலினாலோ, ஸஹாபாக்களின் பலத்தினாலோ கிடைத்த வெற்றியல்ல, மாறாக அல்லாஹ்விடமிருந்து கிடைத்த அருள் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். இதனையே 'நஸ்ருல்லாஹ்' (அல்லாஹ்வின் உதவி) எனும் சொல் உணர்த்துகின்றது.

இந்த ஸூரா இறங்கிய பின் முஹம்மத் r அவர்கள் பின்வரும் துஆவை அடிக்கடி ஓதுவார்கள்:

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ اَسْتَغْفِرُ اللهَ وَاَتُوْبُ إِلَيْهِ

''அல்லாஹ்வின் புகழ் கொண்டு அவனைத் துதிக்கின்றேன். அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகின்றேன். அவனிடமே மீளுகின்றேன்'' (முஸ்னத் அஹ்மத்).

வெற்றிகளின்போது நாம் அல்லாஹ்வுக்கு எவ்வாறு நன்றி தெரிவித்து பணிவுடன் நடந்து கொள்வது என்பதையும் அல்லாஹ் எமக்குத் தந்துள்ள எண்ணற்ற அருட்கொடைகளுக்கு நாம் அவனுக்கு நன்றி தெரிவிப்பதில் குறைகள் விட்டிருந்தால் அவற்றுக்காக அவனிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்பதையும் முஹம்மத் r அவர்களின் இம்முன்மாதிரி எமக்குக் கற்றுத் தருகின்றது.

எம்மை அறியாமல் நாம் பல பாவங்கள் செய்திருக்கின்றோம். அவனளித்த அருட்கொடைகளுக்கு நன்றி தெரிவிப்பதில் குறை விட்டிருக்கிறோம். இவற்றுக்காக நாம் அவனிடம் மன்னிப்புக் கோர வேண்டும்.

வெற்றிகளின்போது நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை இந்த ஸூரா கற்றுத் தருகின்றது. அவற்றை நாம் வாழ்வில் பின்பற்றி ஒழுகுவோம்.

**செயற்பாடு:**

1. பின்வரும் சொற்களின் அரபுப் பதங்களை இரு ஸூறாக்களிலுமிருந்து தேடி எழுதுக.
   - அ) மனிதன்
   - ஆ) பொறுமை
   - இ) நற்செயல்
   - ஈ) அல்லாஹ்வின் உதவி
   - உ) காலம்
   - ஊ) வெற்றி
   - எ) சத்தியம்
   - ஏ) நட்டம்
2. எக்கட்டத்தில் நாம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என ஸூரா அல்-அஸ்ர் குறிப்பிடுகின்றது?
3. ஸூராதுன் நஸ்ரு இறங்கிய சந்தர்ப்பத்தைக் கூறுக.
4. ஒரு மு.்.மின் வெற்றிகளின்போது பேண வேண்டிய ஒழுங்குகளைப் பட்டியற்படுத்துக.